எனது வாழ்க்கையே எனது செய்தி

# காந்தீயம்

ගාන්ධීයම් Gandheeyam

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் இரு திங்கள் வெளியீடு

Publication of All Ceylon Gandhi Seva Sangam

மலர் – 27 இதழ் 04 ஏப்ரல் – மே 2011 விலை ரூபா 10/-

# காந்தியக் கருத்துக்களை சமூகத்திற்கு எடுத்துச் சொல்லவேண்டிய தேவை மீண்டும் எழுந்துள்ளது.

## 63ஆவது காந்தி சிரார்த்த தின நிகழ்வில் பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா

"யாழ்ப்பாணச் சமூகம் இன்று அழிவுப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இந்தக் கொடிய நிலையிலிருந்து மீள்வதற்கு காந்தியின் போதனைகளே எமக்கு வழிகாட்டும். ஆயுதப் போராட்ட காலத்திற்கு முன்னர் காந்திய கொள்கைகளால் கவரப்பட்டு அதன்படி வாழ்ந்த ஒரு நல்ல சமூகம் இங்கு இருந்தது. மீண்டும் அந்த யுகத்தை உருவாக்குவதற்கு காந்திய கருத்துக்களை எடுத்துச் சொல்ல வேண்டிய தேவை எழுந்துள்ளது".

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெற்ற மகாத்மா காந்தியடிகளின் 63ஆவது சிரார்த்த தின நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் செ.கிருஷ்ணராஜா மேற்கண்டவாறு கூறினார்.

30-01-2011 முற்பகல் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் தலைவர் ஆ.வடிவேலு தலைமை தாங்கினார். பேராசிரியர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது,

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் சத்தியத்திற்கு சோதனை ஏற்பட்டது. ஆனால் அங்கு மனித கௌரவம் பேணப்பட்டது. தனிமனித சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதனால் காந்திஜியின் போராட்டம் வெற்றி பெற்றது. யாழ்ப்பாணத்தில் இளைஞர் காங்கிரஸ் உருவாக்கப் பட்டதும் காந்திய கருத்துக்களை உள் வாங்கிய தலைவர்களால்தான். அந்த தத்துவார்த்தப் பின்னணியில்தான் சமூகமும் வாழ்ந்தது. அவ்வாறான சமூகம். மீண்டும் பல்வேறு வடிவங் களிலான வன்முறை கலாசாரத்தை நோக்கிச் செல்வதற்கு காரணம் என்ன என்பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும். சத்தியத்தை நிலைநாட்ட வேண்டுமாயின் நாம் எத்தகைய எண்ணக் கருவை எடுத்துச் செல்ல வேண்டும். காந்தியின் வாழ்க்கை முறையை இன்றைய இளைஞர்களுக்குக் காட்ட வேண்டும். அதன் ஒரு படியாகவே இன்று பாடசாலைகளிலும் பல்கலைக் கழகங்களிலும் தேசிய நல்லிணக்கம் மாணவர்களுக்குப் போதிக்கப்படு கின்றது. இளைஞர்கள் ஊடாகவே மாற்றங்களை நிகழ்த்த முடியும். காந்தீயத் தொண்டர்கள் எமது சமூக நல்லிணக்கத்திற்கு காந்தி கொள்கை களைப் பிரயோகிக்க வேண்டும். சீனா வில் இருந்து வந்த ஏற்றத் தாழ்வு களை, கல்வியில் மாற்றங்களைக் கொண்டு வந்ததன் மூலம் கொன்வியூசியஸ் அகற்ற முற்பட்டாரோ அதேபோன்று இந்தியாவில் காந்தி விடுதலைத் தீயைப் பரவச் செய்தார் – என்றார்.

சங்கத்தின் முன்னாள் தலைவரும் மூத்த காந்தியவாதியுமான சோ.க. – தம்பிப்பிள்ளை அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

"மகாத்மா காந்தி முதலில் தன்னைத் தயார்ப்படுத்திய பின்னரே மக்களைத் தயார்ப்படுத்தினார். உண்ணா நோன்பை யும் சத்தியாக்கிரகத்தையும் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார். விநோபாவை சத்தியாக்கிரகத்திற்காக அவர் தயார்ப்படுத்தினார். அன்று மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் கறுப்பர்களுக்கு எதிராகப் போராடிய போராட்டத்தின் பின்னணியே இன்று தனது வெற்றிக்குக் காரணம் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா கூறுகின்றார்.

எமது சமூகம் சீர்கெட்டுவிட்டது என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருப்பதில் பலன் எதுவும் இல்லை. சமூக அக்கறை கொண்டவர்களை இணைத்து சமூகப் புரட்சி ஒன்றை ஏற்படுத்த வேண்டும். இது பல்வேறு தளங் களில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கான தயார்ப்படுத்தலுக்கு மக் களுக்கு வழி காட்டும் குழு இருக்க வேண் டும். சமூக சீர்திருத்தவாதிகள் மக் களுக்குப் புரியும் மொழியில் பேசி அவர் களை மாற்ற மொன்றுக்காகத் தயார்ப்படுத்த வேண்டும். அடுத்ததாக வாக்காளர் கல்வி எமது மக் களுக்கு மிக மிக அவசிய மானது. எதுக்குமே தகுதியில்லாதவர் களுக்கு நாம் வாக்களிக்கின்றோம். அரசியல்வாதிகள் உணர்ச்சிகளை ஊட்டி வாக்குகளைக் கொள்ளை யடிக்கிறார்கள். இந்தியாவில் வாக்கை விலைபேசி விற்கிறார்கள். இந்த நிலைமைகளால் ஒருபோதும் ஜனநாயகம் நிலைநாட்டப் படப் போவதில்லை. வீட்டுக்கு வீடு வாக் காளர் கல்வி செல்ல வேண்டும். அதன் மூலமாக ஜெயப்பிரகாஷ் நாராயண் கூறும் "மக்கள் அரசியல்" உருவாக வேண்டும்" என்றார்.



அகிம்சையை ஆயுதமாகப் பாவித்த காந்திஜி உணவு, உடை விடயத் தில் அக்கறை காட்டினார். பாரதத்தில் தொழில் வழிகள் தெரியாது மக்கள் இருந்த நேரத்தில் நூற்றல் தொழிலை அறிமுகம் செய்து கதர் உடையை அறிமுகப் படுத்தினார் என்று ஆ.வடிவேலு தனதுரை யில் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மெய்யியல் துறை விரிவுரையாளர் ந.சிவகரன் தனதுரையில் சமூக ஒழுக்கங்களைக் கற்றுக் கொடுத்த காந்தி உண்மையைத்தான் தனது கடவுள் என்கிறார். அவருடைய அகிம்சைக் கோட்பாடு எவருக்கும் தீமை செய்யாமையாகும் – என்றார்.

இந்நிகழ்வில் காந்திய சிந்தனை சான்றிதழ் கற்கையை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு "சத்திய சோதனை" அன்பளிப்புச் செய்யப்பட்டது.

# மனம் போல் வாழ்வு

-விபுலானந்த அடிகள்



ஒவ்வொரு பாஷையிலும் மேலான உண்மைகளை விளக்கும் முதுமொழிகள் பல வழங்கப்பட்டும் போற்றப்பட்டும், வருகின்றன. இவைகள் வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் ஒவ் வொன்று முதன்மை பெற்று முதுமொழிகளாயிருப்ப தோடு புதுப் பொருளுந் தந்து வழிகாட்டு கின்றன. மனம்போல் வாழ்வு என்னுந் தொடர் முதுமொழிகளிலொன்றாய் நின்று உண்மைகள் பலவற்றை விளக்குகின்றது. (பொருளுக்கேற்ப இலக்கண முடிபு அமைத்துக் கொண்டு) இது விளக்கும் உண்மைகளைக் கீழே காண்போம்.

1. ஒருவன் மனம் நன்றாகவோ தீதாகவோ இருப்பதைப் பொறுத்துத் தான் அவன் வாழ்வு சந்தோஷமாகவோ துக்கமாகவோ இருக்கும்.
2. ஒருவன் தன் மனச்சாட்சி வழியேதான் ஒழுக வேண்டும்.
3. ஒருவனது வேட்கையின் போக்கு (நோக்கம்) அவன் (எதிர்கால) வாழ்க்கையை ஆக்குகிறது.
4. ஒருவன் மனம் விடயங்களைக் கருதும் வகையாலேயே அவன் வாழ்வு இன்பமாகவோ துன்பமாகவோ புலப் படுகிறது.
5. செயல்கள் மனத்தோடு பொருந்தாத வழி, செய்தவனைப் பாதிப்பதில்லை மனமோ, செயலோடு பொருந்தாத வழியும் தன்னையுடையானைப் பாதித்தல் நிச்சயம்.
6. உள்ளம் ஆரோக்கியமாயிருந்தால் மட்டுமே உடல்நிலை ஆரோக்கிய மாயிருக்க முடியும்.
7. மனநலமுடையாரது வாழ்வு நீடிக்கும்.
8. பற்றிலிருந்து விடுபட்ட மனந்தான் உண்மை வாழ்வாகிய வீட்டு நிலையை ஒருவனுக்கு உதவுகிறது.
9. மனம் எப்பொருளை இடைவிடாது சிந்திக்கிறதோ அப்பொருளைப் போலாகிறது வாழ்வு.
10. தன் மனத்தின் பிரதி விம்பத்தையே ஒருவன் வெளியே காண்கின்றான்.
11. ஒருவன் மனநிலையிலிருந்து அவன் வாழ்க்கை வேறுபட்டிருக்க முடியாது.
12. ஒத்த மனநிலையுடையாரது வாழ்க்கையும் ஒன்றாகவேயிருக்கும்.

நன்றி - "வியத்தலும் இலமே"

# மனித வாழ்க்கைக்கு இலக்கணம் தந்தார் உத்தமர் காந்தி

இப்பிரபஞ்சம் ஓரொழுங்கு முறையில் இயங்கிக் கொண்டிருப்பதற்கு
அடிப்படையான மெய்ப்பொருள் பற்றி அறிந்ததன் வியாபகத்தை
இப்படியோர்க் கினிதாக எடுத்துரைத் திறைவனை எப்பொழுதும்
இறைஞ்சுதலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி.

மனிதவுளத்தின் கண்ணே பிரகாசித்து விளங்கும் மாணறிவை
மனச்சுரங்கத்தில் கொழுந்து விட்டெரிந்துகொண்டிருக்கும் மனவெழுச்சியை
மனிதனிடம் காணப்படும் அபார ஆற்றலை மகியில் என்றென்றும்
மதித்தலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி.

நம்மையும் பிறரையும் பாதிக்காத நடவடிக்கை களையே
நல்லவர் வரவேற்பர் என்பதனை நம்மிலனேகர் உணர்வதில்லை
வம்பலர்க்கு உதவிகளைச் செய்துகொண்டே நம் தேவைகளை நிறை
வாக்குதலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி

வாங்குதல் சுரண்டல் பறித்தலால் மானிடம் விளங்குவதில்லை
வான்புகழ்க்கு வசையுண்டாகி வெற்றிப் பெருமிதம் குன்றி மனதில்
ஓங்கும் மகிழ்ச்சியும் உதிர்ந்துபோகுமே உணர்வீர் வழங்குதல்
ஈதலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி.

அன்றாட சீவியத்திற்கு அத்தியாவசியமான உண்டி உடை
உறையுள் மூன்றையும் அடைய அயலார்தம் முகம்பார்த்து
மன்றாட வேண்டாம் மனம்வைத்து உழைத்து இத்தேவைகளுக்கு
முடிவு காணலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி

தன்னம்பிக்கை ஆற்றல் தெளிசிந்தனை உதிக்கவும் பொருளியற் கொலை
தேக்கம் வீக்கம் தீயவும் வகுத்தலும் பரவலும் தோள் கொடுக்கவும்
அன்பும் அருளும் இணையவும் மூலப்பொருள்களை அள்ளியெடுத்துப் பொருள்
உற்பாதித்தலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி

தற்காப்புக் கேனும் சினத்தை வெளிப்படுத்தாமல் மரணத்தைத்
தன்னிச்சை யாகஏற்க அஞ்சாமையை நல்கும் அகிம்சை
கற்பிக்கும் வழியாகவே ஊசலாடும் உலக சமுதாயத்தைக்
காத்தலே மனித வாழ்க்கை என்கிறார் உத்தமர் காந்தி

மணிமன்றன்
யாழ்ப்பாணம்

# படிப்பினை

11. வீரமென்றும் வெற்றியென்றும் கோபமூட்டி
வெறிகொடுக்கும் பேச்சையெல்லாம் விலக்கி எங்கும்
ஈரமுள்ள வார்த்தைகளை எவர்க்கும் சொல்லி
இனிமை தரும் காந்தியைப் போல் இரக்கம் வேண்டும்
காரமுள்ள கடும் சொல்லைக் கேட்டிட்டாலும்
காந்தியைப் போல் கலகலத்துச் சிரித்துத் தள்ளி
பாரமற்ற மனநிலையைப் பாதுகாத்து
பகைமையெண்ணா காந்திமுறை பயில வேண்டும்.

(தொடரும்..)

(நாமக்கல் கவிஞர் அவர்களின் "காந்தி அஞ்சலி" என்னும் நூலிலிருந்து எடுக்கப்பெற்றது)

# காந்தீயம்

காந்தி ஆண்டு 142, ஏப்ரல் - மே - 2011


## வெகுசனத் தொடர்பு சாதனங்களும் மூடநம்பிக்கையும்

சமூக இயங்கியலுக்கு வெகுசனத் தொடர்பு சாதனங்கள் இன்றியமையாதனவாகும். தகவல் தொடர்பாடலின் வேகமான வளர்ச்சி காரணமாக பிரதான நகரங்களிலிருந்து பலநூறு கிலோமீற்றர்களுக்கு அப்பாலுள்ள குக்கிராமங்களிலுள்ள மக்கள்கூட உலகில் நடைபெறும் விடயங்களை உடனுக்குடன் அறிந்துகொள்ள முடிகின்றது. நிலநடுக்கம், புயல், ஆழிப் பேரலை போன்ற இயற்கை அனர்த்தங்கள் நிகழலாம் என்ற முன்னறிவிப்புகள் இந்த தொடர்பு சாதனங்கள் மூலம் விரைவாக மக்களைச் சென்றடைவதால் அவர்கள் தமது பாதுகாப்பை முன்கூட்டியே உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது. இதுபோன்ற பல நன்மைகள் இந்த ஊடகங்களால் மக்களுக்குக் கிடைத்தாலும் மூடநம்பிக்கைகளையும், பிற்போக்குத்தனமான கொள்கைகளையும், பழைமை வாதக் கருத்துக்களையும் இன்றும் நிலைநிறுத்துவதில் அவை பின்நிற்பதில்லை.

குறிப்பாக தென்னிந்திய தமிழ்ச்சினிமாவும் சின்னத்திரை தொடர் நாடகங்களும் இவ்வாறான எப்போதே காலாவதியாகிவிட்ட ஐதீகங்களுக்கும் நம்பிக்கைகளுக்கும் முன்னுரிமை கொடுத்து வருவதோடு பெண்ணடிமைத் தனச் சிந்தனைகளையும் முதலாளித்துவ, மேட்டுக்குடி வர்க்க நலன்களை நிலை நிறுத்துவதற்கான கருத்தியல்களையும் நிலை நாட்டி வருகின்றன. இவற்றால் முற்போக்கான - உயர்வான சமூக மாற்றமொன்றை விரும்புகின்ற மக்களுக்கு எவ்வித 'நன்மையும் கிடைக்கப்போவதில்லை. மாறாக கண்மூடித்தனமான குருட்டு நம்பிக்கைகளும் உழைப்பின்றிய திருட்டுத்தனமான வாழ்வுக்கும் குடும்ப வன்முறைக்கும் சமூக நலனில் அக்கறையில்லாத போக்கிற் கும் இவை சமூகத்தை இட்டுச் செல்கின்றன. வயது வேறுபாடின்றி இவற்றின் தாக்கம் மானுட சமூகத்தை உலுப்பி வருகின்றது.

தொலைக்காட்சி, வானொலி போன்றவற்றை பொழுதுபோக்கு சாதனங்களாகக் கருதி ஒரு சாரார் அலட்சியமாக இருந்துவிடலாம். ஆனால் இவற்றுக்கு இருக்கின்ற அபார சக்தி - ஜனரஞ்சகப் பண்பு, தூண்டிலில் சிக்கும் மீன்களைப் போல மக்களை தன்வசப்படுத்திவிடுகின்றது.

மகாத்மா காந்தியடிகள் மூட நம்பிக்கைகளை கடுமையாக எதிர்த்து வந்தார். அவர் ஓரிடத்தில், "குழந்தை, அதன் ஐந்து வயதுவரையில் கற்றுக்கொள்ள வேண்டியது எதுவும் இல்லை என்ற ஒரு மூடநம்பிக்கை இருந்து வருகின்றது. இதற்கு மாறாக உண்மை என்னவென்றால் ஒரு குழந்தை அதன் முதல் ஐந்து வயதிற்குள் கற்றுக்கொள்ளாததைப் பின்னால் எந்தக் காலத்திலும் கற்றுக்கொள்வதே இல்லை" என்று கூறுகின்றார். இதை இன்று வளர்ச்சி காணும் உளவியல் மற்றும் மருத்துவ விஞ்ஞானத்துறைகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஊடகங்களின் ஆக்கிரமிப்பால் மக்கள் சுயமாகச் சிந்திப்பதற்கான நேரம் அருகிவிட்டது. தமது எதிர்காலம், தமது குடும்பத்தின் எதிர்காலம் சமூகத்தின் எதிர்காலம், நாட்டின் எதிர்காலம் குறித்து கலந்துரையாடவும், திட்டமிடவும் முடியாத நிலையில் துடுப்பை இழந்த படகு போன்று தடுமாறிக்கொண்டிருக்கும் மக்களை இந்த அழிவுப் பாதையிலிருந்து மீட்டு சரியான பாதையை நோக்கி பயணிக்க வைக்க வேண்டிய கட்டாயக் கடமை சமூகநலனில் அக்கறையுள்ள ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

பகுத்தறிவுப் பகலவன் என்று வர்ணிக்கப்படும் பெரியார் மூடக் கொள்கைகளை எதிர்ப்பதிலும் தீண்டாமை என்ற கொடிய பிணியை சமூகத்திலிருந்து அகற்றுவதிலும் அயராது பாடுபட்டார். மூட நம்பிக்கைகளுக்கும் சமயங்களுக்கும் இதிகாச புராணக் கதைகளுக்கும் நிறையவே தொடர்பு இருக்கின்றது. பழைய கள்ளை புதிய மொந்தையில் ஊற்றிப் பருகக் கொடுக்கும் செயற்பாட்டையே முதலாளித்துவத்திற்கு சாமரை வீசும் ஊடகங்களும், பச்சோந்தியாக அவர்களை ஒட்டி வாழும் கலைஞர்களும் செய்து வரு கின்றன(ர்). இவர்களின் செயற்பாடுகளால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருவது பாமர மக்களும் தொழிலாளர்களும் ஏழைகளுமாகும். இந்த ஏமாற்று வேலைத் திட்டத்தை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. பகுத்தறிவுள்ள ஒவ்வொரு மனிதனும் தாமதிக்காது இந்த விடயங்கள் குறித்துச் சிந்திக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. எனவே எல்லா வகையான தவறான கருத்தியல்களிலிருந்தும் மீண்டெழுவோம். உண்மையைத் தேடி எமது சிந்தனைகளைத் திசை திருப்புவோம்.

-ஆசிரியர்.

## வன்முறையை ஒழிப்பதற்கு அகிம்சையே ஒரே வழி


ந.சிவகரன்
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக் கழகம்




மேற்கத்தைய நாடுகளில் வளர்ந்து வரும் தொழினுட்பம் மூலமாக ஒருபோதும் சமூகத்திலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. நவீன தொடர்பு சாதனங்களின் வாயிலாக வன் முறையைத் தூண்டுகின்ற செயற்பாடுகளே சமூகத்தில் அதிகம் இடம்பெறுவதை அவதானிக்க முடிகின்றது. வன்முறையை ஒழிப்பதற்கு அகிம்சையே ஒரே வழி. அதுவே நீடித்த நிலைத்த சமாதானத்திற்கு நாட்டை இட்டுச் செல்லும். அகிம்சை என்பது எண்ணம், சொல், செயலால் பிறருக்குத் தீங்கு செய்யாமையாகும்.

சமூகத்திற்கு முதலாளித்துவம் அநீதியை ஏற்படுத்தக் கூடியது என்பதால் மகாத்மா காந்தி முதலாளித்துவ அரசை எதிர்த்தார். முதலாளித்துவம் தனிநபர் சார் விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றது. சமூகம் பற்றிய உணர்வு அல்லது பார்வை அங்கு காணப்படுவதில்லை.

சமய ரீதியாக, மொழி ரீதியாக, இன ரீதியாக, சாதி ரீதியாக பிளவுபடுத்தப்பட்டிருந்த இந்திய சமூகத்தை ஒன்றிணைத்து விடுதலை நோக்கிய பயணத்தில் காந்தி வழிநடத்தினார். இலங்கையில் சுதந்திரம் மற்றும் உரிமைகள் மறுக்கப்பட்டமையும் வன்முறை வகைதொகை யின்றி கட்டவிழ்த்து விடப்பட்டமையுமே அகிம்சை வழியிலான உரிமைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியமைக்கான காரணமாகும்.

தமிழ்ச்சமூகம் இன்று பல்வேறு வழிகளில் தாழ்நிலையை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அது உன்னத எண்ணம் நிறைந்த சமூகமாக மாற வேண்டுமானால் காந்திய வழியிலான ஒரு விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

*(காந்திய சிந்தனை கற்கை நெறி விரிவுரையிலிருந்து)*

# யாழ் நகரில் வள்ளுவர் விழா


யாழ் நகரிலுள்ள வள்ளுவர் சிலைக்கு ஆ.வடிவேலு மலர்மாலை அணிவிக்கிறார்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் ஏற்பாடு செய்த வள்ளுவர் விழா 20-02-2011 ஞாயிற்றுக்கிழமை ஓய்வு பெற்ற அதிபர் ஆ.வடிவேலு தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடை பெற்றது. முற்பகல் 10.00 மணிக்கு சத்திரத்துச் சந்தியிலுள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெற்று திருக்குறட்பாக்களும் அங்கு ஓதப்பட்டன. பின்னர் அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ் மாவட்ட அலுவலகத்தில் கூட்டம் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் திருவள்ளுவர் படத்திற்கு மலர்மாலை சூட்டினார். ஓய்வு பெற்ற அதிபர் க.செல்வக்குமாரனின் வரவேற்புரையைத் தொடர்ந்து "வள்ளுவர் காட்டும் சத்திய வாழ்வு" என்னும் தலைப்பில் ச.லலீசன் சிறப்புரையாற்றினார்.

"தமிழின் குறியீடு வள்ளுவம்தான் என்ற நிலை உலகெலாம் எய்தப்பட்டிருக்கின்றது. இந்த மண் இன்னும் அறவழியில் வாழ்வதற்கு திருக்குறள் உதவும். வள்ளுவன் காட்டிய வழி என்றைக்குமே பொருந்தக் கூடியது. சமயம் கடந்த நூல் என்ற வகையில் முதல் நிலை பெறுகின்ற நூலாக திருக்குறள் விளங்குகின்றது. தமிழன் சொன்ன செய்திகள் முதன்மையாக இருப்பது திருக்குறளில்தான். "பிறரிடம் குறை காணாதே" (சால்பு)என்பதே அச்செய்தியாகும். செம்மொழி மாநாட்டு சின்னத்திலும் வள்ளுவருக்கு முதன்மை கொடுத்ததை நாம் கண்டிருக்கிறோம் என்று ச.லலீசன் தனதுரையில் குறிப்பிட்டார்.

"ஒரு நாயனாராகப் போற்றப்படும் வள்ளுவர் வாழ்ந்து காட்டியது ஏராளம். வள்ளுவர் சொன்னதை வாழ்க்கையாகக் கொண்டவர் காந்தியடிகள். 1995ம் ஆண்டு மார்ச் மாதம் 16ம் திகதி அகில இலங்கை வள்ளுவர் கோட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது" என்று தலைமையுரையில் ஆ.வடிவேலு கூறினார்.

சங்கத்தின் பொதுச் செயலாளர் வி.ஜி.தங்கவேல் நன்றியுரை வழங்கினார்.

## திருவள்ளுவரின் மறுதோற்றமே காந்தியடிகள்

காந்தியடிகளின் கொள்கைகளும் வாழ்க்கை முறைகளும் இற்றைக்கு இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்த சொந்தப் போதகர் திருவள்ளுவருடையவையாயிருந்தன. இவர் தமக்கு வேண்டிய உடை முதலியவற்றை யெல்லாந் தாமே செய்துகொண்டார். ஒருவர் தமது தேவைக்குப் பிறரொருவரையும் காத்திராமல் யார்க்கும் அடியாகாமல் தமது முயற்சியையே காத்திருக்க வேண்டுமென்பது திருவள்ளுவனார் கொள்கை. நோயாளர் தமக்குத் தாமே மருத்துவம் செய்துகொள்ளத் தெரிந்திருத்தல் வேண்டுமென் பதும் அவரது கொள்கை. ஒருவர் தமது முறையான தேவைக்கு மேல் உடைமைகள் வைத்திருத்தலாகாது.

பொதுநல ஊழியமே சிறந்த கடவுள் வணக்கம். பொதுநல ஊழியத்தினாலே வாழ்க்கையில் அமைதியும் முன்னேற்றமும் உண்டாகும். இத்தகைய உயர்ந்த உண்மைகளை ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே சொல்லியும் வாழ்ந்தும் காட்டிய பெரியார் திருவள்ளுவனா ருடைய மறு தோற்றமாயிருந்தவர் காந்தியடிகள்.

*(1968 ஒக்ரோபர் "காந்தீயம்" இதழில் "வள்ளுவரும் காந்தியடிகளும்" என்ற தலைப்பில் புலவர் கருணாலய பாண்டியனார் எழுதிய ஆசிரியத் தலையங்கத்திலிருந்து)*

## இணையத்தில் "திருக்குறள்"

இன்டர்நெற் நாம் வாழும் இந்த பரந்த உலகத்தை ஒரு சிறிய கிராமம் ஆக்கிவிட்டது என்பது நாம் அறிந்ததே. அதில் பிற வெளிநாட்டு மொழிகளைப் போல் தமிழையும் இடம்பெறச் செய்ய நல்ல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ் இணைய பல்கலைக் கழகத்தின் அரிய முயற்சியால் திருக்குறள் இன்டர்நெட்டில் இடம்பெற்றுள்ளது. முகவரி



www.tamilvu.org/library/12100/html/12100001.htm

திருவள்ளுவரின் உருவத்துடன் வரவேற்கும் இத்தளத்தில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் வரிசையாக இடம் பெற்றுள்ளன.

குறள் தேடிப் படிக்க வசதியாக எண் தேடல், சொல் தேடல் மற்றும் அதிகாரம் தேடல் வழியாக விரும்பிய குறளைத் தேடி படித்துக் கொள்ள முடியும். குறிப்பிட்ட பொருளில் திருக்குறள் இருக்கிறதா என்று புத்தகத்தை முழுவதும் வரிவிடாமல் படித்து தேடுவதற்குப் பதிலாக சொல்லைக் கொடுத்து நொடிப் பொழுதில் தேடிப் படிப்பவருக்குத்தான் இந்த இன்டர்நெட் தொகுப்பில் மறைந்துள்ள அற்புதம் தெரியும்.

குறள்களைப் படிப்பதற்கு முன்பு உரையைத் தேர்வு செய்து கொள்ளலாம். பரிமேலழகர், மணக்குடவர், மு.வரதராசனார், ஞா.தேவநேயப் பாவாணர், ஜி.யூ.போப் மற்றும் யோகி சுத்தானந்தா ஆகியோரில் யாரேனும் ஒருவர் இருவர் அல்லது எல்லோருடைய உரைகளையும் தேர்வு செய்துகொண்டால் குறளுக்கு உரிய விளக்க உரையும் உங்களுக்குக் கிடைக்கும். இதுபோன்று திருக்குறளுக்கு எந்தவொரு வெப்சைட்டும் உருவாக்கப்படவில்லை என்பது மிகச் சிறப்பு.

மாணவர்கள், ஆசிரியர்கள் மட்டுமல்லாது பொதுமக்கள் அனைவரும் எளிதில் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும் இந்த வெப் சைட் செயல்படுகிறது.

தமிழில் இதுபோன்ற சிறந்த படைப்புக்கள் இன்டர் நெட்டில் இடம்பெற்றால் இளைஞர்களிடம் தமிழ் மீதான மோகத்தை வளர்க்கச் செய்ய முடியும்.

# "நம் உறுப்புகளை நாமே கடித்துத் தின்கின்றோம்"

அருந்ததி ராய் சக்தி வாய்ந்த சிந்தனையாளர், எழுத்தாளர்; நிர்வாகி; கட்டடக் கலை நிபுணராக அடிப்படைப் பயிற்சி பெற்று, வடிவமைப்பாளராய், சினிமா கதை, வசன கர்த்தாவாய்த் திகழ்ந்தார். "சின்னப் பொருட்களின் கடவுள் (1997) புக்கர் விருது பெற்ற நூல் பலமொழிகளில் பெயர்க்கப்பட்டது. அடக்குமுறை எவ்வடிவில் தலைதூக்கினாலும் பொங்கி எழுந்து தன் பேனா என்ற வாளால் வீசும் துணிவும் அதே உணர்வை ஒவ்வொருவருக்குள்ளும் கிளர்ந்து எழச்செய்யும் ஆற்றலும் மிக்கவர். 2004ல் சிட்னி சமாதானப் பரிசு பெற்றபோது அங்கு ஆற்றிய உரை அமெரிக்க உலகமயமாதல் உலகமெங்குமுள்ள நசுக்கப்பட்ட இனங்களை எவ்வாறு மேலும் பாதிக்கிறது என்பதை வெளியாக்கியது. அவ்வுரை "காந்தீயம்" 2005 மார்ச் முதல் மூன்று இதழ்களில் தொடர்ச்சியாக வெளிவந்தது.

"காலச்சுவடு" ஜூலை, 2007 ல் அவரை ஷோமா சௌத்ரி சந்தித்து எழுதிய நேர்காணல் மொழிபெயர்ப்பு வந்துள்ளது. அதன் சாரத்தை இங்கு தருகின்றோம்.

**கேள்வி:**

நாட்டில் வன்முறை பெருகிவரும் சூழலில் எத்தகைய பின்னணியில் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும்?

**அருந்ததி:**

நடுத்தரவர்க்கம் முற்றாக நுகர்வுக் கலாசாரம், மூர்க்கத்தனமான பேராசை ஆகியவற்றில் ஊறி விட்டது. மேற்கு நாடுகளுக்கு கடும் உழைப்பால் பொருள் தேடி நுகர்கிறார்கள். நாமோ இதற்கு வேண்டிய வளத்தைத் தேடவும், அடிமைப் பணியாளரைத் திரட்டவும் நம்மை நாமே கொலனித்துவ மயமாக்கிக் கொள்கிறோம். நம் கீழுள்ளவர்களைச் சுரண்டுகிறோம். நம் உறுப்புகளை நாமே கடித்துத் தின்கின்றோம். தேசப் பற்றுக்கு மாற்றீடாக இந்தப் போக்கு விளம்பரப்படுத்தப்படுகிறது. பேராசையைத் தீர்க்க, வலுவற்ற நம் சமூக உறுப்பினரைக் கடுமையாக உழைக்கச் செய்கிறோம். அவர்களது நிலத்தையும் நீரையும் சுரண்டுகிறோம்.

நடுத்தர, மேனிலை வகுப்பார், பிற மக்களிடமிருந்து பிரிந்துகொண்டே செல்கின்றனர். உலகிலுள்ள வளர்ந்த நடுத்தர வர்க்கத்துடன் இணைந்துகொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள். இது புதிய பிரிவினைவாதம். மேல்தட்டு மக்களிடம் இயற்கை வளங்கள், தாதுப்பொருட்கள், தண்ணீர், மின்சாரம் எல்லாம் சேர்ந்துவிட்டன. இப்புதிய உயர் கௌரவ பிரசைகளுடைய விளையாட்டுக்கு மேலும் அதிகமாகக் கார், ஆயுதங்கள் எல்லாம் தேவையா கிறது. உழையுங்கள், உற்பத்தி செய்யுங்கள், சும்மா இராதீர்கள், இதனால்தான் நாடு முன்னேறும் என்று இரவு பகல் உழைக்கும் வர்க்கத்துக்கு உபதேசிக் கிறார்கள். இதற்காக அதிக நிலத்தை அபகரிக் கிறார்கள். அரைப்பரப்பு உள்ளவனிடம் பறித்து அவனை நடுத்தெருவில் விடுகிறார்கள். இருபகுதி யாரும் வெளிப்படையான போரில் ஈடுபட்டுள்ளனர். உள்ளவர்களுக்கு அரசும் நிறுவனங்களும், அமைப்பு ரீதியான சமரசங்கள், உலகவங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு மூலதனம், சாதகமான நீதிமன்ற ஆணைகள், சிநேக மான கொள்கை வகுப்பாளர்கள், நட்பான, கூட்டுத் தாபன ஊடகங்கள், இவ்வளவையும் மக்களிடம் வலுக் கட்டாயமாகத் திணிக்கும் காவல்துறை எல்லாம் கை கொடுக்கின்றன. இல்லாதவர்களுக்கு மறியற் போராட்டம், எதிர்ப்பு ஊர்வலம், பணிப்புறக்கணிப்பு என்ற பலமற்ற ஆயுதங்களைக் கைக்கொள்கிறார்கள். இவர்களுக்கு உதவுவதாகக் காட்டிக்கொள்வோர் இரகசியமாக உள்ளவர்களின் வலைக்குள் விழுவதும் உண்டு. நீதி மன்றங்களும், நட்பார்ந்த ஊடகங்களும் தமக்குத் துணைபுரியும் என நம்பியிருந்த நசுக்கப் பட்டோர் அவையும் சந்தர்ப்பத்தில் தம்மைக் கைவிடுவதைக் கண்டார்கள். இதன் விளைவு அவர் களும் ஆயுதம் ஏந்தி, உள்ளவர்கள் வழியில் போராட முன்வந்துள்ளனர்.

அரசு வளர்ச்சி விகிதத்தையும், பங்குச் சந்தைச் சுட்டெண்ணையும் காட்டி "நாடு முன்னேறுகிறது, மக்கள் நல்வாழ்வு உயர்ந்துள்ளது. அதனால் உலக நிதியாளர்கள் தாராளமாகக் கடன் தருகிறார்கள்" என்று கூறி நாட்டை மேலும் கடனில் தள்ளுகிறது.



மகாத்மா காந்தியின் 63ஆவது சிராத்த தினத்தில் யாழ் நகரிலுள்ள காந்தி சிலைக்கு காந்திய சிந்தனைக் கற்கைநெறி இணைப்பாளர் க.செல்வக்குமாரன் மலர்மாலை அணிவிப்பதையும், "இலங்கையின் சமூக அரசியல் சிந்தனையில் காந்திய தத்துவத்தின் தாக்கம்" (1925 – 1976) என்ற தலைப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ஆய்வை மேற்கொண்டு வரலாற்று முதுதத்துவமாணி பட்டத்தைப் பெற்ற திருமதி பிரபாலினி நவம் மற்றும் உலகத் தமிழ்ச் சிற்றிதழ்கள் சங்க விருதைப் பெற்ற 'காந்தியம்' ஆசிரியர் M.ஷாந்தன் சத்தியகீர்த்தி ஆகியோரின் சேவையைப் பாராட்டி யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா விருது வழங்கிக் கௌரவிப்பதையும் படத்தில் காணலாம். (30.01.2011)

# நுகர்வு வெறியில் பிறக்கும் கொலைவெறி பள்ளி மாணவர் வன்முறை

**-வேல்ராசன்**

**(சென்ற இதழ் தொடர்ச்சி...)**

இன்று வர்க்க முரண்பாடு துல்லியமாகப் பிரிந்துவிட்டது. காசு உள்ளவனுக்குத் தனியார் பள்ளி மற்றும் சுயநிதிக் கல்லூரி இல்லாதவனுக்கு, அரசுப்பள்ளி தனியார் மயம் நாட்டை பன்னாட்டு நிறுவனங்களுக்கு வேட்டைக்காடாக மாற்றிவருகிறது என்ற அநீதிக்குக் குறைவில்லாத பங்கை தனியார் பள்ளிகளும் செய்து வருகின்றன. மேற்கண்ட துப்பாக்கிச் சூடுகளில் ஈடுபட்ட மாணவர்கள் பலரும் இத்தகைய தனியார் பள்ளிகளில் படிப்பவர்கள்தான். அரசுப் பள்ளிகள் என்னென்ன நன்மைகளைச் செய்கிறதோ அவற்றின் நேரெதிர் தீமைகளைத் தனியார் பள்ளிகளும் சுயநிதிக் கல்லூரிகளும் செய்து வருகின்றன. இங்கு மேட்டுக்குடி மற்றும் நடுத்தர வர்க்கங்களைச் சேர்ந்தோரே படிக்க வருகின்றனர்.

உழைக்கும் வர்க்கங்களைச் சேர்ந்தவர்களும் கடன் வாங்கியாவது இப்பள்ளிகளுக்கு வந்தாலும் இவர்கள் இங்கே சிறுபான்மையினர்தான். ஆகவே, இப்பள்ளிகள் சமூகத்தைப் பிரதிபலிப்பதில்லை. வண்ணமயமான வாழ்க்கையின் வகைகள் இங்கே பரிமாறப்படுவதில்லை. நடுத்தர வர்க்கத்தின் காரியவாத வாழ்க்கை மட்டுமே இங்கு பேசு பொருளாக இருக்கிறது.

சமீபத்தில் சந்தைக்கு வந்த செல்பேசிகள், வாகனங்கள், டி.வி.க்கள், கணினிகள் எவை என்பதுதான் இங்கே மாணவர்களின் பொது அறிவை வளர்க்கும் கருவி. எதிர்காலத்தில் டாக்டர், இன்ஜினியர், எம்.பி.ஏ. அமெரிக்கா முதலான இலட்சியங்களை அடைய வேண்டும் என்பதை இப்பள்ளி ஊட்டி வளர்க்கின்றன. அவ்வகையில் சுயநலமும் பிழைப்பு வாதமும் மாணவர்களின் நற்பண்புகளாக ஏற்றப்படுகின்றன.

இதனால், போட்டி, பொறாமை, இரக்கமின்மை முதலிய சொத்துக்கள் ஒவ்வொரு மாணவனுக்கும் அவனது இலட்சியத்தை அடைவதற்குத் தேவைப்படுகின்றன. எல்லா மாணவர்களும் இக்காரியவாதப் போட்டியில் வெல்லமுடியாது என்பதால் சோர்வும் விரக்தியும் தனிமைப்படுவதும் நடக்கிறது. சில சமயங்களில் அது சமூகத்தின் மீதான கோபமாகவும் வெடிக்கிறது.

தன்னிலும் ஆரம்பர வாழ்வைப் பார்த்து ஏங்குவதும் அதை அடைய குறுக்கு வழிகளை நாடுவதும் இயல்பான விடயங்களாக ஏற்கப்படுகின்றன.

முன்னர் கண்ட செல்பேசி இணையக் கலாசாரம், திருமணத்துக்கு முந்திய உறவு, புத்தாண்டுக் கொண்டாட்டங்கள், பீர் கலாசாரம், வீடியோ விளையாட்டு முதலியவற்றிலும் தனியார் பள்ளி மாணவர்களே முன்னிலை வகிக்கின்றனர்.

பள்ளி திறக்கும் பருவத்தில் எல்லாத் தனியார் பள்ளிகளும் தங்களது தேர்ச்சி விகிதத்தை விளம்பரமாக வெளியிட்டு பெற்றோர்களை ஈர்க்கின்றன.

அந்த விளம்பரத்தில் கூறப்படாத செய்தி என்னவென்றால் வன்முறை விகிதத்திலும் இப்பள்ளிகள் தான் முதலிடம் வகிக்கின்றன என்பது தான். சுருங்கக் கூறின் அரசுப் பள்ளிகள் ஒரு மாணவனை நல்ல குடிமகனாக மாற்றும்போது தனியார் பள்ளிகளோ ஒரு மாணவனை சமூகத்துக்கு விரோதமான தனிநபராய் வளர்க்கின்றன. கல்வியில் தனியார் மயம் நுழைந்ததற்கு நாம் பெற்றுள்ள சாபக்கேடு இதுதான்.

நடுத்தர வர்க்கத்தின் தனியார் பள்ளி மோகத்திற்கு இணையான மற்றொரு மோகம், ஆங்கில வழிக் கல்வி. ஆங்கில வழிக் கல்விக்கும் மாணவர் வன்முறைக்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் நினைக்கலாம். முதலிடம் கண்ட துப்பாக்கி வன்முறை மாணவர்களெல்லாம் ஆங்கில வழிக் கல்வி படிப்பவர்கள்தான். இதை வைத்துமட்டுமே ஆங்கில மோகம் வன்முறையை வளர்க்கிறது என்று சொல்லவில்லை. சிறார்களின் கல்வியறிவுக்காகப் பயன்படுத்தப்படும் ஆங்கிலம் அவர்களுடைய வாழ்க்கையை இரத்துச் செய்கிறது. ஐ.டி. துறையில் எழுச்சிக்குப் பிறகு வேலைவாய்ப்பிற்காக ஆங்கிலம் மட்டுமே உதவும் என்ற சூழ்நிலையில் தமிழ்வழிக் கல்வியின் மீது பலருக்கு நம்பிக்கையில்லாமல் இருக்கலாம். ஒரு மொழி என்ற அளவில் ஆங்கிலத்தைத் தேர்ச்சியுடன் கற்றுக்கொள்வதும் அதை ஒரு பயிற்று மொழியாகவே பயன்படுத்துவதும் ஒன்றல்ல.

### அந்நியப்படுத்தும் ஆங்கில மோகம்

1947க்குப் பின்னர் உயர் கல்விக்காகப் படித்த முதல் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் தமிழ் வழிக்கல்வி கற்றவர்கள் என்பதோடு ஆங்கிலத்திலும் புலமை வாய்ந்தவர்களாக இருப்பதையும் காண்கிறோம். இவர்களது பெற்றோர்கள் எவரும் பள்ளிக்கூடத்தை எட்டிப் பார்த்தவர்கள் அல்லர். இருப்பினும் வறிய வாழ்க்கையோடு பல மைல் தூரம் நடந்து சென்று கல்விக்காகக் கடும் உழைப்பு செலுத்திப் போராடிக் கற்றார்கள். அந்தக் கால ஆசிரியர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் கல்விப் பணி செய்தார்கள்.

அதற்குப் பிந்திய தலைமுறையைச் சேர்ந்தவர்கள், வசதியான வாழ்க்கையுடன் பள்ளிக்குச் சென்றாலும் அவர்களுக்கு ஆங்கிலம் மட்டுமல்ல தமிழும் தெரியாமல் இருப்பதைக் காண்கிறோம். இதுபோக இன்றைய மாணவர்களின் கவனத்தைச் சிதறடிக்கும் பொழுது போக்குகளும் ஏராளம். மேலும், அன்று உயர்கல்வி முடித்தால் ஏதோ ஒரு அரசுப்பணி கிடைக்கும் என்ற நிலையும் இன்று இல்லை. இந்தப் பிரச்சினையை ஆங்கில வழிக்கல்வி தீர்த்துவிடாது என்பதையே இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

மேலும் ஆங்கில வழிக்கல்வி ஒரு மாணவனை யதார்த்தமான சமூக வாழ்க்கையிலிருந்து அந்நியப் படுத்துவதோடு அவனது அறிவுத்திறன் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கிறது. குழந்தைப் பருவத்திலிருந்து வளரும் சிறார்கள் தாயுடனும் தமிழுடனும் சேர்ந்தே உலகை அறியத் தொடங்குகிறார்கள். பெற்றோர், சுற்றம், உற்றம், நட்பு, தெரு, பெட்டிக்கடைக்காரர், மளிகைக் கடைக்காரர், வணிகர்கள், ஆட்டோக் காரர், பேருந்து ஓட்டுநர் என தமிழால் சூழப்பட்ட உலகில்தான், சிறார்களின் வாழ்க்கைக் கல்வி துளிர்விடத் தொடங்குகிறது. இந்தச் சூழலை ஆங்கில வழிக்கல்வி செயற்கையாகத் துண்டிப்பதோடு அந்த உறவு மேற்கொண்டு வளர விடாமலும் செய்கிறது.

இதனால், ஆங்கில வழிக் கல்வியின் உலகம் பள்ளி வகுப்பறையுடன் சுருங்கிவிடுகிறது. அதனால்தான் ஆங்கில வகுப்பில் படிக்கும் மாணவர்கள் பொதுவில் தனிமை விரும்பிகளாகவும் சிறு சிறு பிரச்சினைகளைக் கூட தீர்ப்பதற்கு இலாயக்கில்லாதவர்களாகவும் சமகால பொது அறிவில் பின்தங்கியவர்களாவும் இருக்கிறார்கள்.

(தொடரும்)

## 07-01-2011 கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் - கவிதை

# "உமைப்போலினி யாருளர்!"



அழகு தமிழால் அறமுரைத்தருளி துர்க்கா
ஆலயம் வடிவமைத்த அன்னையே!
மெழுகு மனதால் உலகை வென்ற
முதல்வியே! தமிழன்னையே!, வெல்க.

தொழுது வரும் அடியவரை என்றும்
தோற்றிடாமல் தொண்டு செய்யவே,
பழுதிடாத பெருவாழ்வுகந்த
"அப்பாக்குட்டி தங்கம்மா" ஓர் அவதாரமே

முழுவதும் உண்மையாக முறையாக ஒன்றை
முகாமையுடன் முயன்று முடிப்பவராக
பொழுதெல்லாம் அம்பாளுக்காய் வாழ்வளித்து
பொற்கோயிலாய் பேறளித்த பெருந்தகையே!

வாய் திறந்தால் தமிழ் சொரியும், வையகம்
போய் வந்தால் அறம் பொலியும், சேயாக
தாய் என்றால் கை கொடுக்கும், துரந்தரியே!
தூய உமைப்போலினி யாருளர்! தாயே!

கொக்குவில், கே.எஸ். சிவஞானராஜா

## காந்திய சிந்தனைக் கற்கைநெறி

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் கல்விப்பிரிவின் ஏற்பாட்டில் காந்திய சிந்தனைக் கற்கைநெறி நடத்தப் பட்டு வருகின்றது. யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி, இலக்கம் 774இல் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட அலுவலகத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிமுதல் 4.30 வரை இவ்வகுப்புக்கள் நடைபெறுகின்றன. முற்றிலும் இலவசமாக நடத்தப்படும் இக் கற்கை நெறி மூன்று மாதகாலத்தைக் கொண்டதாகும். ஆர்வமுள்ள 16 வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இரு பாலாரும் இவ் வகுப்புக்களில் இணைந்து பயன்பெற முடியுமென்றும் மேலதிக விபரங்களை வகுப்பு நடைபெறும் நேரங்களில் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் கற்கைநெறியின் இணைப்பாளர் க.செல்வக்குமாரன் தெரிவித்துள்ளார்.

## ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

காந்திய சிந்தனையை அடிப்படையாகக் கொண்ட கட்டுரைகள், காந்தி தொடர்பான செய்திகள் மற்றும் உள்ளூர் உற்பத்திகள் சம்பந்தமான ஆக்கங்களை வாசகர்கள் எமக்கு அனுப்பி வைக்க முடியும். அவற்றின் பொருத்தப்பாடு மற்றும் தரம் கண்டு அவை காந்தீயத்தில் பிரசுரிக்கப்படும் . ஆக்கங்களை அனுப்பிவைக்கவேண்டிய முகவரி, ஆசிரியர்,"காந்தீயம்" இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்ற வள்ளுவர் தின நிகழ்வில் வி.ஜி.தங்கவேல், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் மற்றும் க.செல்வக்குமாரன் ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம். (20.01.2011)



கிளிநொச்சி உருத்திரபுரத்தில் நடைபெற்ற 63ஆவது சிரார்த்த தின நிகழ்வை
மகாதேவா ஆச்சிரமத்தைச் சேர்ந்த கணேசானந்த மகாதேவ சுவாமிகள் ஆரம்பித்து வைப்பதையும்
புங்குடுதீவு 5ம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா நாகேஸ்வரி தம்பதிகள் அன்பளிப்புச் செய்த
தையல் இயந்திரத்தை பெண்ணொருவருக்கு அகில இலங்கை காந்தி சேவா சங்க
பொதுச்செயலாளர் வி.ஜீ.தங்கவேல் கையளிப்பதையும் அருகில் அருட்சகோதரி அனிற்றா.
திருமதி தங்கவேல் மற்றும் அப்பகுதி கிராமசேவையாளர் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.
30.01.2011

# காந்தி தாத்தா பாட்டு

மஞ்சள் நிலவே! மஞ்சள் நிலவே!
மகாத்மா காந்தி புகழ் பாடு
வெள்ளி நிலவே! வெள்ளி நிலவே!
அன்னை கஸ்தூரி புகழ் பாடு

வண்ண நிலவே! வண்ண நிலவே!
காந்தி தாத்தா புகழ் பாடு
சின்ன நிலவே! சின்ன நிலவே!
இந்தியத் தாத்தா புகழ் பாடு

அழகு நிலவே! அழகு நிலவே
அகிம்சை தாத்தா புகழ் பாடு
இதய நிலவே! இதய நிலவே
இலட்சிய தாத்தா புகழ் பாடு

தேவதை நிலவே! தேவதை நிலவே!
உலகின் தேவதை காந்தியை பாடு
சந்தன நிலவே! சந்தன நிலவே!
சமாதான தேவதை காந்தியை பாடு

-வித்யாசகன்-
கொழும்பு

விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக உலகம் இன்று மிகவும் சுருங்கிவிட்டது. ஆனால் அண்டை வீட்டில் இருப்பவனையும் அந்நியனாகச் செய்துவிட்ட ஒரு நாகரீகத்தைத்தான் விஞ்ஞான முன்னேற்றம் உண்டாக்கியிருக்கின்றது. இந்த நாகரீக நகரங்களை "மனிதக் காடுகள்" என்று குறிப்பிட விரும்புகின்றேன்.

–ஜெயப்பிரகாஷ் நாராயண்

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பணிகளுக்கு நிதி உதவி செய்ய விரும்பும் அன்பர்கள் சங்கத்தின் வங்கிக் கணக்குக்கு அனுப்பி உதவுக.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம்
சேமிப்புக் கணக்கு இலக்கம் : 1117599
இலங்கை வங்கி
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## சத்தியசோதனை, காந்திபடம் அன்பளிப்பு

உரும்பிராய் கிழக்கு காந்திஜி சனசமூக நிலையத்திற்கு மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாற்று நூலான சத்தியசோதனையும் காந்தி படமும் 12-03-2011 அன்று அகில இலங்கை காந்தி சேவா சங்க யாழ். அலுவலகத்தில் வைத்து அன்பளிப்புச் செய்யப்பட்டன. நிலையத்தின் தலைவர் த.பேரின்பநாயகம் இவற்றைப் பெற்றுக்கொண்டார். காந்தி படத்தைப் பெற விரும்பும் சனசமூக நிலையங்கள் எம்முடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு :- அகில இலங்கை காந்தி சேவா சங்கம்,
774, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## வாசகர்களுக்கு!

இவ் இதழின் இலவச பிரதியொன்றை தபால் மூலம் பெற விரும்புவோர் ரூபா.5.00 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட நீண்ட தபாலுறையை ஆசிரியர், "காந்தீயம்" இல. 774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பத்திரிகை 774. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் திரு.சோ.க.தம்பிப்பிள்ளை அவர்களால் அகில இலங்கை சேவா சங்கத்திற்காக யாழ்ப்பாணம். கே.கே.எஸ் வீதி. இலக்கம் 717இல் அமைந்துள்ள தீபம் பதிப்பகத்தில் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
இதழாசிரியர் : எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி